செய்தி வெளியீடு எண்.73 நாள் – 5.2.2007

அரசு செய்தி வெளியீடு

காவேரி ஆற்றில் வரும் தண்ணீர் மற்றும் காவேரி உப நதிகளின் மூலம் காவேரி ஆற்றில் கிடைக்கும் தண்ணீர் ஆகிய எல்லாவற்றையும் சேர்த்துக் கணக்கிடுவது தான் காவேரியின் மொத்த நீர் அளவாகும்.

அப்படி கணக்கிட்டால் தலைக்காவேரியிலிருந்து கீழணை வரையில் மொத்தம் 740 டி.எம்.சி. என்று கணக்கிடப்பட்டுள்ளது.

தற்போது வந்துள்ள இறுதித் தீர்ப்பின்படி இந்த 740 டி.எம்.சி. தண்ணீரில் தமிழகத்திற்கு 419 டி.எம்.சி.யும், கர்நாடகத்திற்கு 270 டி.எம்.சி.யும், கேரளாவிற்கு 30 டி.எம்.சி.யும், பாண்டிச்சேரிக்கு 7 டி.எம்.சி.யும் என்று நடுவர் மன்றம் பிரித்து கொடுத்திருக்கிறது.

இப்படிப் பிரிக்கப்பட்ட தண்ணீரின் அளவு 726 டி.எம்.சி. ஆகிறது.

எஞ்சிய 14 டி.எம்.சி., தண்ணீரில் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கென 10 டி.எம்.சி.யும், வீணாகும் தண்ணீர் என்ற தலைப்பில் 4 டி.எம்.சி.யும் என்று ஒதுக்கப்பட்டுள்ளது.

காவேரி இடைக் காலத் தீர்ப்பு 1991ஆம் ஆண்டு வழங்கப் பட்ட போது தமிழகத்திற்கு மேட்டூர் அணையில் 205 டி.எம்.சி. தண்ணீரைத் தரவேண்டுமென்றும், அதில் தமிழ்நாடு 6 டி.எம்.சி. தண்ணீரை பாண்டிச்சேரிக்குத் தரவேண்டுமென்றும் உத்தரவிட்டி

ருந்தது. அதில் தமிழ்நாட்டிற்கு நிகரமாக வழங்கப்பட்டது 199 டி.எம்.சி. தண்ணீராகும்.

நடுவர் மன்றம் இன்று வெளியிட்ட இறுதித் தீர்ப்பில் மேட்டூருக்குப் பதில் மேட்டூருக்கு மேலே உள்ள "பில்லிகுண்டு" என்ற இடத்தில் தமிழ்நாட்டிற்காக 192 டி.எம்.சி. தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. இந்த 192 டி.எம்.சி. தண்ணீரில் 7 டி.எம்.சி. தண்ணீரை, தமிழ்நாடு பாண்டிச்சேரிக்கு தர வேண்டு மென்றும் தீர்ப்பு கூறப்பட்டுள்ளது.

அப்படியென்றால் "பில்லிகுண்டு" என்ற இடத்தில் 185 டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்திற்கு கிடைக்கும். பில்லிகுண்டு முதல் மேட்டூர் வரை உள்ள இடைப்பட்ட பகுதியில் நடுவர் மன்றத் தீர்ப்பின் போது எடுக்கப்பட்ட கணக்கின்படி 25 டி.எம்.சி. தண்ணீர் கூடுதலாகக் கிடைக்கும். எனவே பில்லிகுண்டில் தரப்படும் 185 டி.எம்.சி. தண்ணீருடன், இடையில் கிடைக்கும் 25 டி.எம்.சி. தண்ணீரும் சேர்ந்து மேட்டூரில் மொத்தமாக 210 டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்திற்குக் கிடைக்கும்.

வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை 9